**இரத்தினபுரி பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான சதவீதத்தாலும் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 07 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இரத்தினபுரி பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட 05 நிர்மாணங்களுக்காகச் செலுத்த வேண்டிய கூட்டுமொத்தமாக ரூபா 525,904 கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டிற்காக மூலதனச் செலவினம் மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் கொடுத்தோர் என்பன சமமான பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது

(ஆ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து அமுல்படுத்தப்பட்ட வேலைகளுக்குரிய நிறுத்தி வைத்தல் பணமான ரூபா 49,230 இற்குப் பதிலாக ரூபா 748,642 கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக மூலதனச் செலவினம் மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் என்பன ரூபா 699,412 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 34,714 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமையின் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பு வருமானம் ரூபா 16,202,073 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதி ரூபா 16,288,086 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக ஆண்டின் வருமானம் ரூபா 86,013 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்ட புறநெகும செயற்திட்டத்தின் கீழ் உதவியாக வழங்கப்பட்ட பல்நோக்கு

கட்டிடத்தின் பெறுமதியான ரூபா 42.99 மில்லியன் தொகை மூலதன ஈடுபடுத்தலுக்கான உதவி மூலம் பங்களிப்புக் கணக்கின் ஊடாக மூலதனமாக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் கட்டிடத்தின் கிரயத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான எந்தவித எழுத்துமூல சான்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.3.3 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 396 | 23,552 | வழங்கப்பட்ட திகதி முதல் 06 மாதங்களை விஞ்சிய வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 11 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 754 | - | ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் போது பொருட் பதிவேட்டை சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 1645 | | சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களுக்குரிய ஓட்ட அட்டவணை தொடர்ச்சியாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | - | விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய வாகனங்களை இனங்காண்பதற்காக தகைமை பெற்ற குழுவொன்று நியமிக்கப்படாதிருந்ததுடன், இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போ அதிகாரியின் பரிந்துரையின் பிரகாரம் சபைக்குரிய 03 கெப் வண்டிகள் மற்றும் ஒரு லொறி வண்டி என்பவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,676,436 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,160,459 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 157,840 | 837,043 | 847,136 | 60,457 | 301,400 | 292,341 | 308,300 | 66,683 |
| வாடகை | 455,000 | 96,678 | 96,678 | - | 765,500 | 260,811 | 260,811 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 690,200 | 1,007,875 | 1,007,875 | 182,780 | 524,650 | 680,286 | 691,236 | 182,780 |
| ஏனைய வருமானம் | 27,347,500 | 17,151,122 | 10,737,057 | 30,969,407 | 29,712,950 | 9,893,795 | 10,499,639 | 20,777,423 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது வீதவரியும் வரியும், அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் சேவைகளுக்கான கட்டணம் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவை விட முறையே 437 சதவீதம், 46 சதவீதம் மற்றும் 02 சதவீதத்தாலும் அதிகரித்திருந்ததுடன் வாடகை வருமானம், பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும், ஏனைய வருமானம் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவை விட முறையே 79 சதவீதம், 26 சதவீதம், 96 சதவீதம் மற்றும் 24 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

#### 2.2.3 ஆதனவரி

சபை அதிகாரப்பிரசேத்தில் ஆதனவரி அறவிடுவதற்காக அபிவிருத்தியடைந்த 06 கிராமப் பிரதேசங்கள் 2014 யூன் 30 ஆந் திகதி வரையிலும் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அபிவிருத்தியடைந்த கிராம பிரதேசங்களை வரைபடத்தில் வெளியிடுவதற்கான எல்லைகளை உள்ளடக்கிய நில வரைபடத்தை தயாரித்தல் தொடர்ச்சியாக தாமதமடைந்ததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சபைக்கு பிரதான வருமான வழிகள் இழக்கப்பட்டிருந்தது.

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 182,760 கூட்டுத்தொகையான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண மீதியை அறவிடுவதற்கு சபை தவறியிருந்ததுடன் அந்த மீதியை பதிவழிப்பதற்காக 2018 மார்ச் 09 ஆந் திகதி உள்ளூராட்சி ஆணையாளரிடம் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது.

**2.2.5 ஏனைய வருமானம்**

கைத்தொழில் வரி, வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பன அறவிட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 பெப்ரவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய நீதிமன்றத் தண்டப்பண வருமானத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு 2018 மார்ச் வரையிலும் தவறியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்களின் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவை மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நலன் விவகாரம், வசதிகள் மற்றும் நலன்புரிகள் போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக சபையினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 93(ஆ) மற்றும் (இ) உப பிரிவுகளின் பிரகாரம் சகல வீடுகளிலும் காணப்படுகின்ற கழிவுப்பொருட்கள் உரிய கால எல்லையில் முறையானதாக அகற்றுவதற்காகவும் வீதிகளில் காணப்படுகின்ற சகல கழிவுப்பொருட்கள் மற்றும் மலங்களை அகற்றுவதற்கான சுயமான பிரதேசங்களுக்குள் இயலுமானவரை தூரத்தில் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்தல் பிரதேச சபையின் நோக்கமாக இருக்கும் போதும், பிரதேச வாசிகளினால் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கோரிக்கை விடுத்திருக்கும் போதும் முறையாக கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிட்டு அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

(ii) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126(ix)(ஆ) பிரிவின் பிரகாரம் மலம் அகற்றல் மற்றும் கழிவுப்பொருள்களை எடுத்துச் செல்லுதல் என்பவற்றுக்காக கட்டணங்களை அறவிடல் என்பன உபவிதிகளுக்குரிய விடயமொன்றாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பான உபவிதிகளை விதித்து அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிவிக்காமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட 16 விடயங்களுக்குரிய 33 பொருள் அலகுகளின் பற்றாக்குறை தொடர்பாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணம் 103 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த அறிக்கையில் வழங்கப்பட்ட சிபாரிசுகளும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய கெப் வண்டியின் எரிபொருள் தாங்கியின் இயலளவு 65 லீற்றராக இருந்த போதிலும், 2017 சனவரி 24 ஆந் திகதி முதல் 2017 யூன் 12 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட வாகன ஓட்ட பரீட்சிப்பின் பிரகாரம் 230 லீற்றர் எரிபொருள் முதல் 308 லீற்றர் எரிபொருள் வரையான அளவு எஞ்சியிருக்க வேண்டியிருந்தது. எனினும் அது தொடர்பாக முறையான பரிசோதனையொன்று இடம்பெறாதிருந்ததுடன் அந்த நிலைமை தொடர்ச்சியாக அதிகரித்த வண்ணமிருந்தது.

(இ) அடியிதழ் புத்தகங்களின் பெறுவனவு மற்றும் விநியோகித்தல் என்பன நிதிப்பிரமாணம் 341 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அடியிதழ் புத்தகப் பதிவேட்டில் குறிப்பிட வேண்டிய போதிலும் எரிபொருள் கட்டளைகள், அடியிதழ் புத்தகங்கள் என்பன அவ்வாறு குறிப்பிடப்படாதிருந்ததுடன் தொடரிலக்கம் ஒழுங்கு முறையாக பின்பற்றப்படாமல் விநியோகிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே எரிபொருள் கட்டளை விநியோகித்தல் மற்றும் அதற்கான செலுத்துதல்கள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகளும் நலிவான நிலையில் காணப்பட்டது.

**3.3 செயற்பாட்டு செயற்றிறனின்மை**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் 1(அ) மற்றும் (ஆ) என்ற உபபிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் மூலம் பராமரிக்கப்படுகின்ற பாதைகள் மற்றும் ஒழுங்கை வீதிகளுக்கு நிரந்தர அடையாளம் மற்றும் எல்லை அடையாளங்களும் அந்தந்த பாதைகளினதும் ஒழுங்கை வீதிகளினதும் திட்டங்களைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளும் அந்த வீதிகளினதும் ஒழுங்கை வீதிகளினதும் பெயர்களை பதிவேட்டில் குறிப்பிட்டு கட்டளைகளில் குறிப்பிடப்பட்ட முறையில் அறிவித்தல்களை பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகளைத் திட்டமிடலும் சகல பிரதேச சபைகளினதும் பணியாக இருந்தது. எனினும் சபையினால் மேற்கூறப்பட்ட பிரிவின் பிரகாரம்

நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபைக்கு சொந்தமான வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு தவறியிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

சபைக்குச் சொந்தமான 70 மயான நிலங்கள் காணப்பட்ட போதிலும் அதில் 68 இன் உரித்து தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 பெறுகைகள்**

**பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 29 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 6,109,000 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 07 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டதன் காரணமாக நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயத்திற்குரிய நிதிஏற்பாட்டில் 86 சதவீதம் முதல் 99.9 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(இ) 03 செலவின விடயங்களுக்குரிய நிதிஏற்பாட்டை விஞ்சி செலவிடப்பட்டவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 45,173 ஆக இருந்தது.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபித்து அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | | குறைபாடுகள் | |
|---|---|---|---|
| ------------------------ | | ------------------------------ | |
| (அ) | கணக்கீடு | (i) | வருமானம் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டமை |
| | | (ii) | பேரேட்டுக் கணக்குகள் பட்டோலைகளுடன் இணங்காமை |
| | | (iii) | கணக்குகளிலிருந்து கைவிடல்கள் காணப்பட்டமை. |
| (ஆ) | வருமான நிர்வாகம் | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை. | |
| (இ) | சொத்துக்களின் பயன்பாடு | சொத்துக்களின் உரித்தைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை | |